1978 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சட்டத்தை மீறு கிறார்கள் என்ற தகவல் அளித்து அந்தத் தகவல் நிரூபிக்கப் பட்டால் அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா: இந்தக் கூலி வழங்குகின்ற நேரத்தில் ஒரே வேலை செய்கிற ஆண்களுக்கு ஒரு கூலியும், பெண்களுக்கு ஒரு கூலியும் இருப்பதை மாற்ற அரசு முன்வருமா? அறுவடைக் காலங்களில் தானியங்களைக் கொடுத்துவிட்டு நடவுக் காலங்களில் தானியங்களைக் கொடுக்காமல் தானியங்களை வைத்துக் கொண்டிருப்பவர்களே இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்கள் அதைத் தடுத்து எல்லா நேரங்களிலும் தானிய மாகக் கூலி கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசு என்பது பொது வாகச் சட்டம் போடுகிற ஒரு அமைப்பு. சிலபேர் தானியங்களை எல்லாக் காலத்திலும் வைத்திருப்பார்கள். விவசாயிகளிடத்தில் எல்லா நேரங்களிலும் தானியம் இருக்காது. ஆகவே, தானிய மாகத்தான் கொடுக்க வேண்டுமென்று கட்டுப்படுத்துவது சிலருக்குப் பாதகமாகக் கூட இருக்கும். ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற யோசனை ஏற்கத்தக்கது அல்ல.

திரு. என். பழனிவேல்: விவசாயத் தொழிலாளர்களுக்குத் தானியமாகவும் பணமாகவும் கொடுக்கப்படுகிற கூலிச் சட்டம் கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இருப்பதாகத் தெரி கிறது. இதைத் தமிழகம் பூராவும் உள்ள விவசாயத் தொழி லாளர்களுக்கு அமல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கீழத் தஞ்சையில் 1969 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டம் அமுலில் இருக் கிறது. மற்றப் பகுதிகளில் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அமலில் இருக்கிறது.

* 832 வினு—

கல்லூரிகளில் வேலை வாய்ப்பளிக்கும் கல்வி முறை

திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எந்தெந்த பல்கலைக்கழகத்தின கீழ் இயங்கும் கல்லூரிகளில் ''ஜாப் ஓரியன்டெட் கோர்ஸ்'' ஆரம் பிக்கப்பட்டிருக்கிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) சென்னை மற்றும் மதுரைப் பல்கலைக் கழகங்களின் கீழ் உள்ள கல்லூரிகளில் ''ஜாப் ஓரியன்டெட் கோர்ஸ்'' (வேலை வாய்ப்புத் தரக்கூடிய பிரிவுகள்) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) பொதுமக்கள் தொடர்பு, புத்தகத் தொழில், சுற்றுலாக் கல்வி, சத்துள்ள உணவு வகைகள், கார்ப்பரேட் செக்ரடரிஷிப், கூட்டுறவு, ராணுவப்பயிற்சி, குழந்தை மற்றும் குடும்பநலம், இசைப்பயிற்சி, மின்சாரப் பொறியியல், பண்ணைகள் இயல், ரப்பர் தொழில் நுட்பம், வியாபார நிர்வாகம் போன்ற பல்வேறு பிரிவுகள், ''ஜாப் ஓரியன்டெட் கோர்ஸ்''ன் கீழ் பல்வேறு கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் கல்லூரி ஆசிரியர்கள்

* 833 வினா— திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977-78ஆம் ஆண்டில் தற்காலிகமாக கல்லூரிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்;

பயிற்றுநர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ..	285 பேர்
உதவிப் பேராசிரியர்கள்	217 பேர்

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, நூற்றுக் கணக்கானவர்கள் தற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களில் 6 மாத காலம் பணியாற்றியவர்களும் உண்டு, 6 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்களும் உண்டு, அவர்களுக்கு எதிர்காலத்தில் மாற்றுத் திட்டம் ஏதாவது அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்களுடைய பிரச்சினையை அரசு அனுதாபத்தோடு கவனிக்கும் என்று அவர்களுக்கு உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது.